**வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனி - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் *(கம்பனிகளிற்கு பொருத்தமற்றது)* என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனியின் 2018 ***திசெம்பர்*** 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றவாறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான ***இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு*** இணங்க நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரஅளவிலான தொழில்முயற்சிகளுக்கான ***இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு*** இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காசோட்டக் கூற்றில் செயற்படு மூலதன மாற்றத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய ஆண்டுக்குரிய வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டிய பெறுமதிகளின் | திருத்திய காசோட்டக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | காசோட்டக் கூற்றை சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வித்தியாசங்களின் தாக்கங்களின் அடிப்படையில் காசு வருகையாக காட்டப்பட வேண்டிய ரூபா 2,938,675 ஆன தொகை காசு வெளியேறுவதாக குறிப்பிடப்பட்டுள்மை. | | |
| (ஆ) சொத்துக் கொள்வனவு தொடர்பிலான ரூபா 343,140 ஆன காசு வெளியேற்றமானது காசோட்டக் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டில் காசு வருகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | திருத்திய காசோட்டக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | காசோட்டக் கூற்றை சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

| **குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 17:19 அத்தியாயத்திற்கு அமைய நடைமுறையல்லா சொத்துக்களுக்கு விளைதிறன்மிக்க ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக புத்தகம் பெறுமதி ரூ. 20,713,263 ஆன நிலையான சொத்துக்கள் பூரணமாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறை சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் பூரணமாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள சொத்துக்களை மீண்டும் 2019 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களின் 7.4 d அத்தியாயத்திற்கு அமைய காசோட்டக் கூற்றில் காசு | திருத்திய காசோட்டத்தில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | நியமத்திற்கு அமைய காசோட்டக் கூற்று தயார் செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| வெளியேற்றமாகக் கருதப்பட வேண்டிய ரூபா 224,805 ஆன பணிக்கொடை செலுத்தல் காசோட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களின் 5.5 அத்தியாயத்திற்கு அமைய ஆகக் குறைந்தது வருமான மற்றும் நிதிச் செலவினம் விாிவான வருமானக் கூற்றில் மேற்புறத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்குப் பதிலாக வருமானம் மற்றும் செலவினக் குறிப்பின் கீழ் கணிப்பிடப்பட்டு மொத்த இலாபம் விரிவான வருமானக் கூற்றின் மேற்புறத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் நிதிச் செலவினம் விரிவான வருமானக் கூற்றின் மேற்புறத்தில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | நியமத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.5.3 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை ரூபா | தொங்கலில் உள்ள காலப்பகுதி | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற இனங்காணப்படாத பண்ணைகளுக்கு இடையிலான கடன்பட்டோர் நிலுவை தொங்கட் கணக்கை தீர்ப்பதற்கு மீளாய்வு ஆண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளாது நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. | 14,117,550 | 02 வருடம் | இந்த தொங்கட் கணக்கு 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் தீர்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | தொங்கட் கணக்கை தீர்ப்பதற்கு தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கிடைக்கப்பெற்ற விடயம் | தொகை ரூபா | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) மஹாவலி கால்நடை வளக் கம்பனியிடம் கிடைக்க வேண்டியவை என | 1,030,137 | பெறுமதியை உறுதி செய்து கொள்ளத்தக்க சான்று | சமர்ப்பிக்கப்பட்டிருக்க – வில்லை | நிலுவையை உறுதிசெய்தை நேரடியாகப் பெற்றுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த நிலுவையை அக்கம்பனி ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. | | | | கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) பொது சேர்மம் | | | | |
| மஹாவலி பொருளாதார முகவராண்மை | 403,962,731 | பெறுமதியை உறுதி செய்து கொள்ளக்கூடிய சான்று | இப் பெறுமதிகள் தொடர்பிலான எந்தவொரு சான்றும் கம்பனியிடம் இல்லை. | நிலுவையை உறுதி செய்பவை கணக்காய்வுக்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | | | |
| ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதனக் கொடை | 3,583,706 | மூலதனக் கொடைகளாக கணக்குகளில் பதிவு செய்வதில் ஏற்புடைய ஆவணங்கள் | இந்த நிலுவைக்கான நிலுவைச் சான்றிதழ் ஒன்று இல்லை. 2012 ஆம் ஆண்டு முதல் இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த நிலுவையை பதிவழிப்புச் செய்வதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறியத்தருகின்றேன். | நிலுவையை உறுதி செய்பவை கணக்காய்வுக்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| வெளிநாட்டு உதவி | 5,729,782 | | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டு நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிராவிய பண்ணைக்கு உரித்தானதாக இருந்த கால்நடை இருப்புக்காக கிடைக்க வேண்டிய ரூபா 5,820,430 மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் அறவிட்டுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவையைத் தீர்க்குமாறு இந்த ஆண்டில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2019 ஆம் ஆண்டில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | பெற வேண்டிய நிலுவையை அறவிட்டுக் கொள்ள தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

---------------------------------------------
--

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2015 ஆம் ஆண்டில் மேற்கொண்ட சம்பளத் திருத்தத்திற்கு அமைய ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூ. 6,893,711 ஆன நிலுவைச் சம்பளம் மற்றும் அதற்குரிய ரூ. 1,817,553 ஆன ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்புக்கு ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அவை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் செலுத்தல்களை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | செலுத்த வேண்டிய நிலுவைகளை செலுத்துவதற்கு தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,015,025 ஆன பங்களிப்புத் தொகை செலுத்தப்படாது இருப்பதனால் எதிர்காலத்தில் கம்பனி மிகைக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படலாம் என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது. | நீர்ப்பாசன மற்றும் நீரகவள முகாமைத்துவ அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூ.மி. 5.8 ஆன தொகையைப் பெற்றுக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்தை செலுத்துவதற்கும், எஞ்சிய தொகையை அரச தனியார் பங்குடைமை தொழில்முயற்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் செலுத்தி முடிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | செலுத்த வேண்டிய நிலுவைகளை செலுத்துவதற்கு தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,428,901 தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 4,421,557 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 7,344 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கம்பனியின் தொழில் நடவடிக்கைகளை மீள்ஒழுங்குபடுத்தாமை பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது நட்டம் அடைந்துவரும் நிலையில் பேணிவரப்படுகின்ற மஹாவலி கால்நடைவள தொழில்முயற்சி தனியார் கம்பனியை, அரச தனியார் பங்குடைமையொன்றாக மறுசீரமைக்க தனியார் முதலீட்டாளர் ஒருவரை சம்பந்தப்படுத்திக் கொள்வதற்காக 2016 சனவரி 28 ஆம் திகதிய அவி/16/0063/704/003 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2018 அக்டோபர் 03 ஆம் திகதிய அவி/18/2083/803/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மூலம் தனியார் கம்பனியொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை மாதம் 29 ஆம் திகதி வரை அத்தீர்மானம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரச தனியார் பங்குடைமையொன்றாக மறுசீரமைப்பது அத்தியாவசியமாகும் என்பதை அறியத்தருகின்றேன். | அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்த அல்லது அவ்வாறு செய்யாத பட்சத்தில், அமைச்சரவை தீர்மானத்தை திருத்தியமைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) கம்பனியின் அமைப்பாக்க விதிகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளைக் கொண்டதாகக் காணப்பட்டதுடன், 03 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய பங்குகள் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. விநியோகிக்கப்பட்டிருந்த 03 பங்குகளும் வேறு தனியார் கம்பனி பணிப்பாளர்கள் மூன்று பேருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மகாவலி அதிகாரசபையின் | கம்பனியின் பெயரில் விநியோகிக்கப்பட்டுள்ள 03 பங்குகளையும் மீளப் பெற்றுக் கொண்டு இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு விநியோகிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை அறியத்தருகின்றேன். | இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு பங்குகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| உரித்துக்கு கம்பனியின் எந்தவொரு பங்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் அமைப்பாக்க விதிகளின் 12 பிரதான நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கம்பனியின் பண்ணைகளில் பயிர் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மொத்தமாக மற்றும் சில்லறையாக கோழிகளை வளர்த்தல், விவசாயிகளுக்கு கோழிகளை வளர்க்கத் தேவையான உணவு உற்பத்தி, மாடு, பன்றி, கோழி போன்ற விலங்குகளை இனப்பெருக்கம் செய்தல், விற்பனை செய்தல், மேம்படுத்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழவகை, தானிய வகைகள் சம்பந்தமான தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பதுடன், எருமை மாடு, பசுமாடு, கோழி, பன்றி மற்றும் ஆடுகளை வளர்ப்பது சிறியளவிலும் மற்றும் பால் சம்பந்தமான உற்பத்திகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வந்தன. | இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தனியார் தொழில்முயற்சியொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த செயன்முறை நிறைவடைந்த பின்னர் இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | அமைப்பாக்க விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் கால்நடைவளப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்பாடுகளின் கீழ் இலக்கு உற்பத்தியை உண்மை உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் புரொய்லர் கோழி இறைச்சி உற்பத்தி 27 சதவீதம், பன்றி இறைச்சி உற்பத்தி 16 சதவீதம் ஆடு வளர்ப்பு 11 சதவீதம் என்ற வகையில் குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருந்தன. | - மேற்படி - | இலக்கு உற்பத்திகளை அடைந்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) கம்பனி தற்போது | அடுத்த ஆண்டில் | பயன்படுத்தப்படுகின்ற |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தி வருகின்ற இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு உரித்தான ரூ. 3,162,812 ஆன 04 வாகனங்கள் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அந்த வாகனங்களை பொறுப்பேற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மகாவலி அதிகாரசபைக்கு உரித்தான தெமட்டகொட பிரதேசத்தில் அமைந்துள்ள காணி கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூ. 14,929,159 ஆக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மேற்படி காணியை பொறுப்பேற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | வாகனங்களின் உரிமையை கம்பனிக்கு பொறுப்பேற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) கிராந்துருகோட்டே பண்ணையில் அமைந்திருந்த பால் தயாரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வந்த இயந்திரசாதனங்கள் மூலம் பால் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தொழில்சாலைக் கட்டிடம் பழைமைவாய்ந்ததாக இருந்ததன் காரணமாக வளவின் நில ஓடுகள் உடைந்திருந்தமை, கூரை சேதமடைந்துள்ளமை, மழை நீர் தொழில்சாலைக்குள் ஒழுகுதல், வடிகாலமைப்பு சேதமடைந்துள்ளமை, உள்ளக சுத்தம் செய்யும் கட்டமைப்பு பலவீனமானதாகக் காணப்படல் போன்ற விடயங்களினால் சுகாதார ரீதியிலான சிக்கல்கள் எழுந்திருந்தன. இவ்வாறான பலவீனமான சூழல் நிலைமைகளின் அடிப்படையில் உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக எதிர்காலத்தில் சட்ட சிக்கல்கள் எழ முடியும் என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது. | இந்த சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்காக அரச தனியார் பங்குடைமை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. | உற்பத்தியின் பொது சுகாதார ரீதியில் பாதுகாப்பானவாறு சிக்கல்கள் ஏற்படக் காரணமாகின்ற விடயங்களை சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 2018 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த 05 பண்ணைகளுக்கு உரித்தான ரூ. 21,359,381 பெறுமதிமிக்க சொத்துக்கள் கம்பனியினால் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி முறையற்ற விதத்தில் மகாவலி அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தன. | குறித்த 05 பண்ணைகள் தொடர்பிலான சொத்துக்களின் பெறுமதியை 2019 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | எழுத்து மூலமான அங்கீகாரம் இன்றி சொத்துக்களை சாட்டுதல் செய்யக் கூடாது. |
| (ஊ) கம்பனிக்கு உரித்தான கிராந்துருகோட்டே பண்ணையை விலங்கு வளர்ப்பு பயிற்சி நிலையமாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் மகாவலி அதிகாரசபையின் "சீ" வலயத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூ. 12,501,900 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட மாட்டுத் தொழுவம், ஆட்டுத் தொழுவம் உள்ளிட்ட நிர்மாணிப்புக்கள் மற்றும் பொருட்கள் ரூ. 8,967,600 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு 2016 பெப்ருவரி மாதம் 08 ஆம் திகதி இந்தக் கம்பனிக்குச் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. வேறு தரப்பினர்களினால் அவர்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தயார் செய்யப்பட்டிருந்த இந்த நிர்மாணிப்புக்கள் கம்பனிக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த நிர்மாணிப்புக்களை பயன்படுத்திக் கொள்வதற்கான குறித்ததொரு திட்டமோ அல்லது முறையியலோ கம்பனியிடம் இல்லாமை காரணமாக, சாட்டுதல் செய்யப்பட்ட திகதி முதல் அச்சொத்துக்கள் செயலிழந்து காணப்பட்டன. | மேற்படி மாட்டுத் தொழுவம் மற்றும் குட்டிகளின் தொழுவம் மற்றும் ஆடுகளின் தொழுவத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு விளங்குகளை கொள்வனவு செய்யும் ஆற்றல் கம்பனிக்கு இல்லை. எனவே இந்த தொழுவங்கள் அரச தனியார் பங்குடைமை தொழில்முயற்சி ஒன்றை ஆரம்பித்த பின்னர் விளைதிறன்மிக்க பணியொன்றுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | இந்த நிர்மாணிப்பை பயன்படுத்திக் கொள்வதற்கான முறையியலைத் தயார் செய்தல் வேண்டும். |